# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2347/09 - 2023 අගෝස්තු මස 29 වැනි අඟහරුවාදා - 2023.08.29

2347/09 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: KES/DS/LND/AC/8/9/8.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

*(களுகங்கை நீர் வழங்கல் திட்டத்தின் II ஆம் கட்டத்தின் கீழ் கெஸ்பேவ நிலக்கீழ் நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதிகளை எடுத்தல்.)*

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் கெஸ்பேவ கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள காணித்துண்டு வரை படத்தின் இல. 521210 இன் வலய இலக்கம் 03, பத்திர இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள துண்டு இல. 2 என சுட்டிக்காட்டப்பட்டுள்ள அளவிலிருந்து சுமார் 0.7409 விஸ்தீரணத்தையுடைய கீழே விபரிக் கப்பட்டுள்ள காணித் துண்டுகள்:

**1. துண்டு இலக்கம் 223**

காணியின் பெயர்: கஹடகஹவத்த, கனன் தோருவாவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 15-20 வயதுடைய கலப்பு பயிர் செய்கை மற்றும் நிலையான கட்டிடமொன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இல. 191/1, ஹொரணை வீதி, கெஸ்பேவையில் குடியிருக்கும் சியபலாகொட கங்கா நமலாகே தொன் தேவப்பிரிய சந்திரசிறி சேனா சேகர; விஸ்தீரணம்: 0.3819 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம் 225**

காணியின் பெயர்: கஹடகஹவத்த, கனன் தோருவாவத்த; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 15-20 வயதுடைய கலப்பு பயிர் செய்கை மற்றும் நீர்



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

தாங்கி ஒன்று காணப்படுகின்றது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இல. 191/1, ஹொரணை வீதி, கெஸ்பேவையில் குடியிருக்கும் சியபலாகொட கங்காநமலாகே தொன் தேவப்பிரிய சந்திரசிறி சேனாசேகர; விஸ்தீரணம்: 0.3590 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெஸ்பேவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே. பீ. பேமதாஸ,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அதிகாரி,
கெஸ்பேவ.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவ,
2023, ஓகத்து 21.

EOG 08 - 0279